உரோமாபுரியார் 1 12:11

உங்கள் அலுவலில் அசதியாயிராமல் மனதில் வேகமாயிருங்கள்; ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யுங்கள்.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 9:35

ஓர் பிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அரவணைத்துக்கொண்டு, அவர்களுக் குச் சொன்னதாவது;

கொரிந்தியர் 1 15:58

ஆகையால் நமக்குப் பிரியமான சகோதரரே, ஆண்டவரிடத்தில் நீங்கள் படுகிற பிரயாசம் வீணாய்ப் போகிறதில்லையென்று அறிந்து, நிலை மையுள்ளவர்களாயும், அசையாத வர்களாயும், இடைவிடாமல் ஆண்ட வருக்குரிய கிரியைகளை மிகுதியாய்ச் செய்பவர்களாயும் இருப்பீர்களாக.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 12:26

ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால், என்னைப் பின்பற்றக்கடவான். நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே என் ஊழியனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால், என் பிதா அவனைக் கனப்படுத்துவார்.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 10:45

ஏனெனில் மனுமகன் பணிவிடை கொள்வதற்கு வராமல், பணிவிடை செய்யவும், அநேகருடைய மீட்பாகத் தம்முடைய உயிரைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 25:21

எஷஜமான் அவனைப்பார்த்து: சவ்வாஸ், நம்பிக்கையுள்ள நல்ல ஊழி யனே! நீ சொற்பக்காரியங்களில் பிர மாணிக்கனாயிருந்ததினால், அநேக காரியங்களின்மேல் உன்னை அதிகாரி யாக்குவேன். உன் எஷஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்றான்.

தீமோத்தேயு 2 3:16-17

சர்வேசுரனுடைய மனுஷன் எவ்வித நற்கிரியையும் செய்வதற்குத் தகுந்த உத்தமனாவதற்குத் தேவ ஏவலால் அருளப்பட்ட வேதாகமங்கள் போதிப்பதற்கும், கண்டிப்பதற்கும், திருத்துவதற்கும், நீதிநெறியில் நடத்துவதற்கும் பிரயோஷஜனமுள்ளது. (2 இரா. 1:20.)

உபாகமம் 13:4

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரானவரை மாத்திரம் பின்பற்றி அவருக்குப் பயந்தவர்களுமாய் அவருடைய கற்பனைகளை அநுசரிக்கிற வர்களுமாய் அவருடைய வாக் கியத்திற்குச் செவிகொடுக்கிறவர்களுமாய் அவருக்கு மாத்திரமே ஊழியஞ் செய்து அவரை அண்டிக் கொள்ளக் கடவீர்கள்.

கலாத்தியர் 5:13

சகோதரரே, நீங்கள் சுயாதீனத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆயினும் இந்தச் சுயாதீனத்தைச் சரீர இச்சைகளுக்கு ஏதுவாக்காமல், சிநேகத்தினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்.

உபாகமம் 10:12-13

இப்பொழுது இஸ்ராயேலே! நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருடைய மார்க்கத்தில் ஒழுகி, உன் தேவனாகிய கர்த்தரிடத் தில் அன்புகூர்ந்து உன் முழு இருதயத் தோடும், முழு ஆத்துமத்தோடும் அவரைச் சேவித்து, உனக்கு நன்றாகும்பொருட்டு, நான் இன்று உனக்குக் கற்பிக்கின்ற கர்த்தருடைய கற்பனைகளையும், ஆசாரங்களையும் நீ கைக்கொண்டு காக்க வேண்டுமென்பதையே அல்லாது உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் வேறு என்னத்தைக் கேட்கிறார்?

ஷேஜாசுவாவின் திருவாகமம் 24:15

அல்லது கர்த்தரைச் சேவிக்கிற எங்களுக்கு ஆகாததாய் நீங்கள் கண் டால் உங்கள் இஷ்டப்படி செய் யுங்கள். உங்களுக்குச் சித்தமானால் மெசொப்பொத்தாமியாவில் உங்கள் பிதாக்கள் தொழுத தேவர்களை யாகி லும் நீங்கள் வாசம்பண்ணுகிற அமோறையர் தேசத்து விக்கிரகங் களையென்கிலுங் கும்பிட்டுச் சேவிக் கக்கூடும். நானும் என் வீட்டாரு மோ கர்த்தரையே சேவிப்போம் என்றான்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 13:14

ஆகையால் ஆண்டவரும் குருவு மாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவி னேனாகில், நீங்கள் ஒருவர் ஒருவரு டைய பாதங்களைக் கழுவக்கடவீர்கள்.

ஷேஜாசுவாவின் திருவாகமம் 22:5

ஆனாலும் தேவனாகிய கர்த்த ருடைய தாசனான மோயீசன் உங்க ளுக்குக் கொடுத்த கட்டளைகளை யும், சட்டப்பிரமாணங்களையும் கெட்டியாய்க் கைக்கொண்டு நுணுக் கமாய் நிறைவேற்றுவதில்

சாக்கிரதை யாயிருங்கள்; அதுகள் என்னவென் றால்: நீங்கள் கர்த்தரில் அன்புகூர்ந்து அவருடைய எல்லா வழிகளிலும் நடந்து, அவர் கற்பனைகளை அனு சரித்து, அவரைப் பற்றிக்கொண்டு உங்கள் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் அவரைச் சேவிக்க வேண்டும் என்பதேயாமென்றான்.

சங்கீதங்கள் 37:23

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:24

எவனானாலும் இரண்டு எஷஜ மான்களுக்கு ஊழியஞ் செய்யக் கூடாது. ஏனெனில் ஒருவனைப் பகைத்து, மற் றொருவனை நேசிப்பான், அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றொரு வனைப் புறக்கணிப்பான். சர்வேசுரனுக் குந் திரவியத்திற்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (லூக். 16:13.) மூ 24. திரவியத்துக்கும்:- என்னும் இந்த வார்த்தை மூல பாஷையில் மாம்மோன் என்றிருக்கிறது. அதற்குச் சீரிய பாஷையில் திரவியமென்றர்த்தமாம்.

சங்கீதங்கள் 34:22

ஆண்டவரே! தேவரீர் பார்த் தீரே; கர்த்தரே, மவுனமாயிருந்து என்னை விட்டு அகலாதேயும்.

இராயப்பர் பொது நிருபம் 1 2:16

உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடுபோர்வையாகக் கொள் ளாமல், மெய்யாகவே சுயாதீனராய், சர்வேசுரனுடைய ஊழியரைப்போல் பணிந்து நடங்கள்.

உரோமாபுரியார் 1 6:13

அவ்வண்ணமே உங்கள் அவயவங்களை அநீதத்தின் எத்தனங்களாகப் பாவத்துக்கு ஒப்புக்கொடாமல், மரித்தோரிலிருந்து உயிர்த்தவர்களாக உங்களைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களையும் நீதியின் நடக்கைக்குரிய எத்தனங்களாகச் சுவாமிக்குக் (கையளியுங்கள்).